## மாணிக்கநத்தம் ஊராட்சி மன்ற தலைவரின் நடவடிக்கைகள்
## முன்னிலை : திரு.க.வேலுசாமி

கோப்பு எண்.4/2024/மாணிக்கநத்தம் ஊராட்சி நாள். 23.02.2024

பொருள் :- மனைப் பிரிவு – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு – நாமக்கல் மாவட்டம் - பரமத்தி வட்டம்- மாணிக்கநத்தம் ஊராட்சி கிராம சர்வே எண்.86/2A2Cல் 0.2847 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள 6 குடியிருப்பு மனைப் பிரிவுக்கு தொழில் நுட்ப அனுமதியுடன் மனைப் பிரிவிற்கு உள்ளாட்சி அளவில் இறுதி ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :-
1) அரசாணை எண். 79,வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 04.05.2017
2) அரசாணை எண். 112, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை (UDE) 4 (3) நாள் 22.06.2017
3) நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் அவர்களின் ந.க.எண்.NKL/80YXHIQO/1624/2023/TCP, நாள் 21.11.2023.
4) திரு.பி.கிருஷ்ணமூர்த்தி, 412/1, College Road, பொத்தனூர், பரமத்தி வேலூர் வட்டம், நாமக்கல் மாவட்டம் என்பவரின் விண்ணப்பம் நாள். 03.10.2023
5) சந்தை மதிப்பில் (Market value) 3% மதிப்பு தொகை உரிய அரசு தலைப்பில் செலுத்தப்பட்ட நாள். 02.02.2024.
6) மாணிக்கநத்தம் ஊராட்சி மன்ற தீர்மான எண்.135, நாள். 23.02.2024.

---

ஆணை :-

பார்வை 1 மற்றும் 2இல் காணும் அரசாணைகளில் திட்டமில்லாப் பகுதியில் வேளாண்மை அல்லாத பிற பயன்பாடுகளுக்காக நிலங்களை பயன்படுத்திக் கொள்ள இயற்றப்பட்ட விதியின்படி பார்வை 3ல் காணும் கடிதம் மூலம் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களால் பரமத்தி வட்டாரம், மாணிக்கநத்தம் ஊராட்சி கிராம சர்வே எண்.86/2A2Cல் 0.2847 ஏக்கர் பரப்பளவில் இடத்தில் அமைந்துள்ள 6 எண்ணிக்கையிலான குடியிருப்பு மனைப் பிரிவிற்கான தொழில் நுட்ப அனுமதி ஒப்புதல் வரைபடத்திற்கு மனை உட்பிரிவு ம.வ / ந.க.எண்.NKL/80YXHIQO/16246/2023/TCP, நாள் 21.11.2022 என எண்ணிடப்பட்டு உத்தரவு வரப் பெற்றுள்ளது.

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களின் மனைப் பிரிவு நிபந்தனைகளில் தெரிவித்துள்ளவாறு உத்தேச மனைப்பிரிவில் உள்ளாட்சிக்கு பொது உபயோகத்திற்கான இடத்திற்குரிய பாதுகாப்பு நிதி OSR நிலத்திற்குரிய தொகை மற்றும் நண்நிலை வரி ஆகியன நகர் ஊரமைப்பு துறையால் வசூல் செய்யப்பட்டுள்ளது.

பார்வை 1ல் காணும் அரசாணையில் நிலப் பயன்பாட்டு மாற்று கட்டணமாக (Land Use Conversion Charge) 1899ம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் (மத்திய சட்டம் 2/1899 உட்கூறு AA பிரிவு 47-இன்கீழ் சந்தை மதிப்பில் 3% நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டதை அடுத்து பரமத்தி வட்டாரம், மாணிக்கநத்தம் ஊராட்சி கிராம சர்வே எண்.86/2A2Cல் 0.2847 ஏக்கர் பரப்பளவு உள்ள நிலப்பரப்பிற்கு வழிக்காட்டி மதிப்பு ஏக்கருக்கு ரூ.4,80,000/- சந்தை மதிப்பு மனைகளாக பிரிக்கப்பட்ட நிலையில் சதுர அடி 1ற்கு ரூ.50/- என கணக்கிட்டு சந்தை மதிப்பில் (Maket value) 3% மதிப்பு தொகை ரூ.27,000/- (ரூபாய் இருபத்து ஏழாயிரம் மட்டும்) நிர்னையம் செய்யப்பட்டது ஏற்கனவே உரிய அரசு

தலைப்பில் 02.02.2024 அன்று இணையதளத்தில் செலுத்தப்பட்டுள்ளது. எனவே, பரமத்தி வட்டாரம், மாணிக்கநத்தம் ஊராட்சி மற்றும் கிராம சர்வே எண்.86/2A2Cல் 0.2847 ஏக்கர் பரப்பளவு இடத்தில் அமைக்கப்பட்டுள்ள 6 குடியிருப்பு மனைப் பிரிவிற்கு பார்வை 3ல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் தொழில் நுட்ப ஒப்புதல் ஆணையில் குறிப்பிட்டுள்ள அனுமதி மனைப் பிரிவு நிபந்தனைகளின்படி கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு உள்ளாட்சி அளவில் ஒப்புதல் அளித்து ஆணையிடப்படுகிறது.

நிபந்தனைகள்

1) மனைப்பிரிவு வரைபடத்தில் பிரிக்கப்பட்டுள்ள மனை நில அளவுகளில் விபரங்களை இவ்வலுவலக அனுமதியின்றி மாற்றி அமைத்தல் கூடாது.

2) மனைப்பரிவில் சாலை வசதி, தெருவிளக்கு வசதி, குடிநீர் மற்றும் சாக்கடை வசதி போன்ற அடிப்படை வசதிகளை மனையின் உரிமையாளரே செய்து கொள்ள வேண்டும்.

3) வரன்முறை செய்து வழங்கப்படும் இம்மனைப்பிரிவுகளை வீடுகள் மட்டும் கட்டுவதற்கு பயன்படுத்த வேண்டும். அபாயகரமான மற்றும் அருவருக்கத்தக்க தொழிற்சாலைகள் ஏதும் ஏற்படுத்திட அனுமதியில்லை.

4) மனுதாரர் செலுத்தியுள்ள கட்டண விகிதங்களில் வேறுபாடுகள் ஏதுமிருந்து, கட்டணம் செலுத்த வேண்டியிருப்பது, ஏதேனும் பின்னர் கண்டறியப்படின் அதனை மனுதாரர் செலுத்த வேண்டும்.

5) ஒவ்வொரு மனைப்பிரிவும் பத்திரப் பதிவு செய்யும் போது மனைப்பிரிவு அங்கீகார வரைபட நகலினை இணைத்து பத்திர பதிவு செய்திட வேண்டும்.

6) அரசின் கொள்கை அளவிலான மனைப்பிரிவு அங்கீகாரத்தில் அரசு மாற்றங்கள் ஏதேனும் செய்து உத்திரவுகள் பிறப்பிக்கப்பட்டால், அந்த உத்தரவுகளுக்கு மனுதாரர் கட்டுப்பட்டவராவார்.

7) பத்திரபதிவுகள் மற்றும் நில உடமை மாற்றங்களில் ஏற்படுத்தப்படும் சிவில் வழக்குகளுக்கு மனுதாரரே முழு பொறுப்பாவார்.

மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளை மீறினால், இந்த மனைகளுக்கு வழங்கப்பட்ட அங்கீகாரம் ரத்து செய்திட ஏதுவாகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தலைவர்.
மாணிக்கநத்தம் ஊராட்சி,
பரமத்தி வட்டாரம்.

பெறுதல்

திரு.பி.கிருஷ்ணமூர்த்தி,
412/1, College Road,
பொத்தனூர்,
பரமத்தி வேலூர் வட்டம்,
நாமக்கல் மாவட்டம்.

நகல் :-

1) நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், க.எண்.6/12, 17, பரமத்தி ரோடு (தெற்கு பகுதி), நாமக்கல் - 637 001.
2) சார்பதிவாளர், பரமத்தி சார்பதிவாளர் அலுவலகம், பரமத்தி
3) ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), நாமக்கல் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
4) உதவி இயக்குநர் (நில அளவை), நாமக்கல் மாவட்டம்.
5) வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) பரமத்தி வட்டாரம்.